உயர்திணையும் அஃறிணையும்

எழிலி : "அப்பா, அப்பா, இங்கே வாங்க, இந்தப் பூனையைப் பாருங்க. காலெல்லாம் ஒரே சேறு. அந்தச் சேற்றுக் காலோட நம்ம வீட்டுக்குள்ளும் வந்திருக்கு".

அப்பா : "அட, ஆமா! எங்கேயிருந்து சேற்றைப் பூசிக்கொண்டு வந்ததுன்னு தெரியலேயே?"

எழிலி : "என்னப்பா, இது? தரையில என்ன இருக்குன்னு இந்தப் பூனைக்குத் தெரியாதா? பார்த்து நடக்கலாம்ல."

அப்பா : "அது சரி, எழிலி, நீயா இருந்தா என்ன செய்வே?"

எழிலி : ஐ! நானா இருந்தா, கால்ல சேறு படாம ஒரே தாண்டா தாண்டி ஓடி வந்திருப்பேனே"

அப்பா : அதைத்தான் நானும் சொல்ல வர்றேன். சேற்றில் கால் பட்டால் அழுக்காகும்னு உனக்குத் தெரியுது. ஆனால், பூனைக்குத் தெரியலே. ஏன் தெரியுமா?

எழிலி : தெரியலயே, நீங்களே சொல்லுங்கப்பா.

அப்பா : ஏன்னா, நாமெல்லாம் உயர்திணை. விலங்கு, பறவையெல்லாம் அஃறிணை. அதனாலதான், என்ன நடக்கப்போகுதுன்னு நமக்குத் தெரியுது. ஆனா, விலங்கு, பறவைக்கு நாம என்ன செய்றோம்? செய்தா என்னாகும்னு புரிந்துகொள்ள முடியல.

எழிலி : ஓ! அதுதானா? அது சரிப்பா, உயர்திணை, அஃறிணைன்னு சொன்னீர்களே, அப்படின்னா என்னப்பா?

அப்பா : நான் கேட்கிறதுக்கு முதல்ல விடை சொல்லு, உன்னைச் சுற்றி யாரெல்லாம் இருக்காங்க?

எழிலி : இம். இம்... நீங்க, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, சிற்றப்பா, பெரியப்பா, அத்தை அப்புறம்...என்கூட விளையாடுவாங்களே மீனா, ரோசி, கம்ரூன், பாபு, சுரேஷ், கௌதம், சீனு, ராதிகா, ரம்யா, ஐசு, சிருஷ்டி, பாரு, வித்யூன்.....

அப்பா : போதும்....போதும். உனக்கு நிறைய நண்பர்கள் இருக்காங்கன்னு எனக்குத் தெரியும். உன்னைச் சுற்றி இருக்கிறவங்கன்னு நீ இப்ப சொன்னேல, இவங்க எல்லாருக்கும் உயிரிருக்கு. அதுமட்டுமா? நல்லது எது? தீயது எதுன்னு பகுத்துப் பார்க்கும் பண்பும் இருக்கு. இவங்க மட்டுமில்லாம நம்மைப்போலவே பண்புகள் இருக்கிற மக்கள், தேவர், நரகர் இவங்களையெல்லாம் உயர்திணைன்னுதான் சொல்றாங்க. அதுசரி, எழிலி. நீ இன்னும் வேறெ என்னல்லாம் உன்னைச் சுற்றி இருக்குன்னு சொல்லலியே?

Tamil 3rd-std_Term3.indd 21 7/20/2019 5:43:18 PM

எழிலி : வேறே என்னப்பா இருக்கு?

அப்பா : இதோ இந்த நாற்காலி, மேசை, குடம், மின்விசிறி, புத்தகம் இதுமட்டுமல்லாம பூனை, நாய், மாடு, ஆடு முதலான விலங்குகள், கோழி, காகம், குயில், மயில், கிளி முதலான பறவைகள் அப்படின்னு நிறைய பார்க்கிறாய் அல்லவா! இவற்றில் பறவை, விலங்குகளுக்கு எல்லாம் உயிர் இருக்கு. ஆனால் நாற்காலி, மின்விசிறி இவை போன்றவற்றிற்கு உயிரில்லை. அதனால, இந்த மாதிரி உயிருள்ள, உயிரற்ற பொருள்களெல்லாம் உயர்திணைல சேர்க்க முடியாது. இவையெல்லாம் உயர்திணை அல்லாத திணை. அதனாலதான் அஃறிணைன்னு சொல்றோம். நிலம், நீர், மலை, மரம், கடல் இவையெல்லாம்கூட அஃறிணைதான்.

எழிலி : ஆனா நான் பார்க்கிற பொருள்ல இதுதான் உயர்திணை, இதுதான் அஃறிணைன்னு எப்படிப்பா கண்டுபிடிக்கறது?

அப்பா : அடடே, நீ நல்லாவே யோசிக்கிற எழிலி. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பேரு இருக்குல்லே, அதை வைத்து நீ எளிதாக் கண்டுபிடிக்கலாம். அந்தப் பெயரை வைத்தே அதற்கு உயிரிருக்கா, நம்மைப்போல அது சிந்திக்குமா? வேலை செய்யுமான்னு கண்டுபிடிக்கலாம்ல. பெயரை வைத்தே என்ன திணை, பால், எண், இடம்னு எல்லாத்தையும் கண்டுபிடிக்கலாம். இதைப்பற்றி இன்னும் விரிவா நாளைக்குச் சொல்றேன். இதுவரைக்கும் சொன்னதில என்ன புரிஞ்சுக்கிட்டன்னு எனக்கும் தெரியணும்ல தென்னை மரம் உயர்திணையா, அஃறிணையா, எங்கே சொல்லு பார்க்கலாம்.

எழிலி : இம்…இம்.மரமெல்லாம்அஃறிணைதானே.தென்னைமரம்அஃறிணைதாம்பா. இப்ப நல்லாப் புரிந்துகொண்டேன் அப்பா.

திணை என்பது, ஒழுக்கம். அதன் அடிப்படையில் உயர்திணை, அஃறிணை என இரண்டாகக் கூறுவர்.

எது உயர்திணை? எது அஃறிணை?

பிரித்து அறிவோமா?

வாளி	கன்று	மீன்	முருகன்	பசு	கழுதை	குருவி
வண்டு	தேனீ	செல்வி	ஒட்டகம்	எறும்பு	குழந்தை	மரங்கள்
சிறுமியர்	நாற்காலி	மேசை	மின்விசிறி	சிறுவர்	விலங்கு	பறவை

Tamil 3rd-std_Term3.indd 22 7/20/2019 5:43:18 PM

செயல் திட்டம்

உங்கள் வீட்டில் நீங்கள் காணும் பொருள்களை உயர்திணை, அஃறிணை என்று வகைப்படுத்தி எழுதி வருக.

4 மழைநீர்

மழைநீர் வெள்ளம் ஓடியே
மண்ணில் வீணாய்ச் செல்லுதே
உழைப்பின் வியர்வை போலவே
உயர்வாய் எண்ண வேண்டுமே !

பொன்னும் பொருளும் போலவே
பொழியும் நீரும் செல்வமே
விண்ணின் கொடை என்பதில்
வியப்பு ஒன்றும் இல்லையே !

குளங்கள் ஏரி நிரம்புமே
குருவி கொக்கும் வாழுமே
வானின் அமுதம் சேமித்தே
வாழ்வைச் செம்மை செய்வமே !

நாடும் வீடும் செழிக்கவே
நல்ல தண்ணீர் வேண்டுமே
ஓடும் நீரைத் தேக்கியே
உலகின் பசியைத் தீர்ப்பமே !

உழவும் தொழிலும் ஓங்கவே
உற்ற துணை மழைதானே
வளமும் நலமும் நிறைந்திட
வணங்கி மழையைப்
போற்றுவோம்!

மனிதர் பறவை விலங்குகள்
மகிழ்ந்து வாழத்தேவையே
இனிய மழை வரும்போது
இல்லம் முழுதும் சேமிப்போம் !



Tamil 3rd-std_Term3.indd 24 7/20/2019 5:43:20 PM

வாங்க பேசலாம்

- பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க
- மழை பற்றி ஏற்கெனவே நீ அறிந்த பாடலைப் பாடி மகிழ்க
- மழை உனக்கு எவ்வளவு பிடிக்கும் என்று உம் சொந்த நடையில் பேசுக

ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக

செல்லுதே	ஓடியே	போலவே	வேண்டுமே
__________	___________	___________	___________
__________	___________	___________	___________

முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

பொன்னும், பொழியும்

______________________   ______________________

______________________   ______________________

______________________   ______________________

இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற்களை எழுதுக

மனிதர், இனிவரும்

______________________   ______________________

______________________   ______________________

______________________   ______________________

அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1) பொழியும் – ________________   2) செம்மை – _________________

3) ஓங்குதல் – ________________   4) இல்லம் – _________________

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தேக்குதல் – என்ற சொல்லின் எதிர்ச்சொல்--------------

அ) நீக்குதல் ஆ) தெளிதல்

இ) சேமித்தல் ஈ) பாதுகாத்தல்

2. வானின் அமுதம் – இச்சொல் குறிப்பது------------------

அ) அமிழ்தம் ஆ) அமிர்தம்

இ) சோறு ஈ) மழைநீர்

3. மழையாகுமே – இச்சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

அ) மழை + யாகுமே ஆ) மழையாய் + யாகுமே

இ) மழை+ ஆகுமே ஈ) மழையாய் + ஆகுமே

C53EU2

4. நினைத்தல் – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

அ) கூறுதல் ஆ) எண்ணுதல்

இ) மறத்தல் ஈ) நனைத்தல்

'பொன்னும் பொருளும்' இதுபோன்று 'உம்' சேர்ந்துவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

____________________ ____________________

____________________ ____________________

Tamil 3rd-std_Term3.indd 26 7/20/2019 5:43:20 PM

இணைந்து செய்வோம்

பொருத்துவோமா?

1. நாடும் வீடும்	வேண்டுமே
2. வளமும் நலமும்	சேமிப்போம்
3.இல்லத்தில் நீரை	மழையாகுமே
4. உற்ற துணை	செழிக்கவே
5. உயிராய் எண்ண	நிறைந்திட

சிந்திக்கலாமா?

மழை பொழியும் போது மழைநீரைப் பாத்திரங்களில் பிடித்து வைக்கச் சொல்வார் மான்விழியின் அம்மா. ஆனால், மான்விழியோ ஓடும் நீரில் கப்பல் செய்து விளையாடியபடியே இருப்பாள். மழைநீரைச் சேமிக்கச் சொல்லி, மான்விழியின் அம்மா ஏன் கூறுகிறார்?

கலையும் கைவண்ணமும்

தேவையான பொருள்கள்

மண் குவளை அல்லது மின்னட்டை

வண்ணக்குழம்பு –பல நிறம்

தண்ணீர் வாளி

முக்கால் பாகம் நீர் நிரம்பிய வாளியில் வண்ணக் குழம்புகளைத் தேவையான அளவு சேர்க்க வேண்டும். (விரும்பிய வண்ணங்கள் ஒவ்வொரு மூடி) அந்த வண்ணக் குழம்பை, ஒரு குச்சியால் கலக்கவேண்டும். அதில், குவளை அல்லது மின்னட்டையை மூழ்கச் செய்து எடுக்கவேண்டும். இப்போது, அழகான வண்ணங்களுடன் கூடிய குவளை அல்லது மின்னட்டையைக் கண்டு மகிழலாம்.

Tamil 3rd-std_Term3.indd 27 7/20/2019 5:43:20 PM

சொல்லக் கேட்டு எழுதுக

1) மழைநீர் 2) வெள்ளம் 3) குளங்கள் 4) தண்ணீர்

2) கொடை 6) வியர்வை 4) ஓங்குதல் 5) போற்றுவோம்

இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் படித்துப் பார்ப்போம். விடுபட்ட இடத்தை நிரப்பி மகிழ்வோம்

மாலா போலாமா?	கு _ கு
யானை பூனையா?	பா _ பா
மேளதாளமே	தா _ தா
மாறுமா?	கா _ கா

செயல் திட்டம்

மழைநீர் சேமிப்புத் தொட்டியுடன் கூடிய படத்தை வரைந்து வண்ணம் தீட்டி வருக.

Tamil 3rd-std_Term3.indd 28 7/20/2019 5:43:21 PM

5 காகமும் நாகமும்

Tamil 3rd-std_Term3.indd 29 7/20/2019 5:43:21 PM



Tamil 3rd-std_Term3.indd 30 7/20/2019 5:43:22 PM

நீதிக் கருத்து : பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்தல்

வாங்க பேசலாம்

- பாம்பு காகத்தின் முட்டைகளை உடைத்தது சரியா? கலந்துரையாடுக.
- காகமும் நாகமும் கதையை உமது சொந்த நடையில் கூறுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. காகம் ___________ வாழும்

அ) கூட்டில் ஆ) வீட்டில்

இ) புற்றில் ஈ) மண்ணில்

2. நண்பர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல்

அ) அன்பானவர்கள் ஆ) உறவினர்கள்

இ) பகைவர்கள் ஈ) நெருங்கியவர்கள்

3. முத்துமாலை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) முத்து + மாலை ஆ) முத்தும்+ மாலை

இ) முத்தும்+ ஆலை ஈ) முத்து+மலை

4. மரம் + பொந்து இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) மரம்பொந்து ஆ) மரப்பொந்து

இ) மரப்பந்து ஈ) மரபொந்து

QQISMK

வினாக்களுக்கு விடையளிக்க.

1. காகத்தின் முட்டைகளைப் பாம்பு என்ன செய்தது?
2. பாம்பை அழிப்பதற்காகக் காகம் யாரிடம் ஆலோசனை கேட்டது?
3. 'காகமும் நாகமும்'கதை உணர்த்தும் நீதி என்ன?

புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

நான் ஒரு வீட்டு விலங்கு ;
இலை, தழைகளை உண்பேன். நான் யார்?

மரத்திற்கு மரம் தாவுவேன்;
வாழைப்பழம் விரும்பி உண்பேன்.. நான் யார்?

கரும்பே எனக்கு உணவாகும்
கருமை எனது நிறமாகும்.– நான் யார்?

முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக

1. ஒன்று கொக்கு இருந்தது குளக்கரையில்

____

2. எண்ணியது சாப்பிட மீன்களைச்

____

3. அனைத்தும் சென்றன விளையாடிச்

____

Tamil 3rd-std_Term3.indd 33 7/20/2019 5:43:24 PM

எந்த உயிரினத்திற்கு என்ன பண்பு?

உயிரினம்	பண்பு
	ஒற்றுமை
	சுறுசுறுப்பு
	கூட்டமாக வாழும்
	நன்றியுணர்வு

மொழி விளையாட்டு

ஒவ்வோர் எழுத்தாகச் சேர்ப்போமா?

1. தா

தாய்

தாய்மை

2. வா

____

____

3 தூ

____

____

4 கா

____

____

Tamil 3rd-std_Term3.indd 34 7/20/2019 5:43:24 PM

பெயர் எது? செயல் எது?

		பெயர்	செயல்
1.	குதிரை வேகமாக ஓடியது	_______________	____________
2.	ஆசிரியர் பாடம் நடத்தினார்	_______________	____________
3.	குழந்தை சிரித்தது	_______________	____________

கலையும் கைவண்ணமும்



செயல் திட்டம்

பறவை இறகுகளைச் சேகரித்து வருக.

முத்துமாலை படம் வரைந்து வண்ணம் தீட்டி வருக.

6 நல்வழி

பாடல் பொருள்

ஆற்றில் நீர் வற்றியதால், அதன் வறண்ட மணல்பகுதி, வெப்பத்தால் சூடேறி நடப்பவரின் பாதங்களைச் சுடும். அத்தகைய நிலையிலும் அந்த ஆற்று மணலைத் தோண்டுகின்றபோது, சுரக்கின்ற ஊற்றானது, உலக மக்களுக்கு உணவாய் அமையும். அதுபோல, உயர்ந்த குடிப்பிறப்பில் தோன்றியவர்கள், வறுமைநிலையில் வாடினாலும், தம்மிடம் வந்து பொருள் தருக எனக் கேட்பவர்க்கு இல்லை எனக் கூறாது, தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவுவார்கள்.

ஆசிரியர் குறிப்பு

நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிகளைக் கூறுவது, நல்வழி. இந்நூலை இயற்றியவர், ஔவையார். இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு மொத்தம் 41 வெண்பாக்கள் அமைந்துள்ளன.

Tamil 3rd-std_Term3.indd 36 7/20/2019 5:43:26 PM

வாங்க பேசலாம்

உங்களிடம் ஒரு பழம்தான் இருக்கிறது. உங்கள் தம்பியும் தங்கையும் அந்தப் பழம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குப் பழத்தைப் பிரித்துக் கொடுப்பீர்களா? நீங்களே எடுத்துக் கொள்வீர்களா? உங்கள் கருத்தைக் கூறுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. 'உலகூட்டும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________________

அ) உல+கூட்டும் ஆ) உலகு + கூட்டும்

இ) உலகு + ஊட்டும் ஈ) உலகூட்டு + உம்

2. 'அந்நாளும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

அ) அந் + நாளும் ஆ) அ + நாளும்

இ) அந்நா + ளும் ஈ) அந்த + நாளும்

3. 'இசைந்து' இச்சொல்லின் பொருள் ____________________

அ) மறுத்து ஆ) பாடி

இ) ஒப்புக்கொண்டு ஈ) உதவி

இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.

1. ஆற்று – ஊற்று
2. ____________________
3. ____________________

Tamil 3rd-std_Term3.indd 37 7/20/2019 5:43:26 PM

வினாக்களுக்கு விடையளிக்க.

1. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?
2. ஊற்று நீரைக் கொடுப்பது எது?
3. நல்ல குடிப்பிறந்தாரின் இயல்பு எத்தகையது?

பாடலை நிறைவு செய்க

ஆற்று	நீரில்	துள்ளியே
அழகாய்	நீந்தும்	மீன்களே
____	_____	_____
____	_____	_____
____	_____	_____
____	_____	_____

கலையும் கைவண்ணமும்

பொருத்துக

நல்ல	மனம்
ஆற்று	குணம்
மணல்	நீர்
உதவும்	வீடு

மொழி விளையாட்டு

இரண்டாம் எழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்கலாமா?

1. படம் – பழம், பணம், பதம்
2. நலம் – ----, ----, ----
3. உதவு – ----, ----, ----
4. பத்து – ----, ----, ----
5. குயில் – ----, ----, ----

சிந்திக்கலாமா?

ஒருவர் செல்வம் படைத்தவராயிருந்தும் பிறர்க்கு உதவாமல் இருப்பதாக நீங்கள் அறிகிறீர்கள். உதவுவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அவர்க்கு எப்படி எடுத்துச் சொல்லலாம்?

Tamil 3rd-std_Term3.indd 39 7/20/2019 5:43:27 PM

அறிந்து கொள்வோம்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

– திருக்குறள்

ஐயம் இட்டு உண் – ஆத்திசூடி

எதிர்ச்சொல் எழுதுவோம்

பனிக்கட்டி குளிர்ச்சியாய் இருக்கும்.
நெருப்பு ______ இருக்கும்.

பூனை மேசையின் மேல் இருந்தது.
எலி, மேசையின் ––––––– இருந்தது.

தங்கை ––––––– சென்றாள்.
அண்ணன் உள்ளே வந்தான்.



சிறுவன் பேருந்தில் ––––––––.
சிறுமி பேருந்திலிருந்து இறங்கினாள்.

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுப்போமா?

1. ஆற்றின் ஓரம்-------------.ஆடையில் இருப்பது----------- (கறை, கரை)

2. காட்டில் வாழ்வது----------. கடையில் விற்பது------------- (புலி, புளி)

3. மனிதர் செய்வது-----------. மரத்தை அறுப்பது------------- (அறம், அரம்)

4. மீனைப் பிடிப்பது-----------. கையில் அணிவது------------ (வளை, வலை)

5. பொழுதைக் குறிப்பது---------. பொறுப்பாய்ச் செய்வது--------- (வேலை, வேளை)

6. ஒழுக்கத்தைக் குறிப்பது-------. உணவுப் பயிரைக் குறிப்பது----- (தினை, திணை)

7. உயர்ந்து நிற்பது-----------. உனக்குப் பிடிக்கும்------------ (மழை, மலை)

8. வீரத்தைக் குறிப்பது---------. விறகைத் தருவது------------- (மரம், மறம்)

9. விடிந்த பின் வருவது---------. வீரத்தால் அடங்குவது---------- (காளை, காலை)

10. சான்றோர் வெறுப்பது--------. சாலையில் கிடப்பது------------ (கல், கள்)

வேறுபட்ட வண்ணத்தில் உள்ள எழுத்துகளைச் சேர்த்தால் கிடைக்கும் ஆடை வகைகளை எழுதுக.

பள்ளம்	அரும்பு	பார்த்திபன்	ஆர்த்தி	-----------
பருந்து	வட்டம்	கசடு		-----------
கம்பு	பம்பரம்	அப்பம்	தக்காளி	-----------

Tamil 3rd-std_Term3.indd 41 7/20/2019 5:43:27 PM

7 தமிழ்மொழியின் பெருமை

உலகில் உள்ள மொழிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தமிழ்மொழி. 'அமிழ்தினும் இனிய மொழியாக'நம் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ், தமிழ் என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் காதில் '**அமிழ்து, அமிழ்து** எனத் தேனாய்ப் பாய்வதை உணர்வீர்கள். அதனால்தான், பாரதியாரும்,

IXFJ9M

'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே என்று பாடியுள்ளார். மேலும்,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்'

எனத் தமிழைப் போற்றிப் புகழ்கிறார்.

'தமிழுக்கு அமுதென்று பேர் – இன்பத்
தமிழ்எங்கள் உயிருக்கு நேர்'

எனப் பாரதிதாசனாரும் தமிழின் பெருமையைக் கூறுகிறார்.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இணைந்தது, முத்தமிழ். இம்மூன்று துறைகளின் கீழ் தமிழ்மொழியின் வெளிப்பாட்டைக் காணலாம்.

எழுத்து நடை வாயிலாக வெளிப்படுவது, இயல்
பாடல்கள் மூலம் வெளிப்படுவது, இசை
அங்க அசைவுகளுடன் வெளிப்படுவது, நாடகம்



Tamil 3rd-std_Term3.indd 42 7/20/2019 5:43:28 PM

பழங்காலத்தில் தமிழர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், அணிகலன்கள், பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆடைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள அகழாய்வுகள் உதவுகின்றன. அண்மையில் சிவகங்கை மாவட்டத்தில் 'கீழடி' என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வில் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி 'ஆதித் தமிழர் மொழி' என்பது புலப்படுகிறது.

கணியன் பூங்குன்றனார் எழுதிய 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் புறநானூற்றுப் பாடல் தொடர் இன்றளவிலும் ஐக்கிய நாடுகள் அவையில் தமிழ்மொழியின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

நடுவண் அரசு 12.10.2004 ஆம் ஆண்டு தமிழ்மொழியானது, பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் திறனுள்ள 'செம்மொழி' என அறிவித்துள்ளது. இது தமிழ்மொழிக்கு வளமை சேர்ப்பதாக உள்ளது.

தமிழர்களின் வீர விளையாட்டுகளை விளக்கும் பாறை ஓவியங்கள், கல்வெட்டுகளில் காணப்படும் அரசர்களின் கொடை பற்றிய செய்திகள், இலக்கியங்கள் குறிப்பிடும் பண்பாட்டுக் கூறுகள் போன்ற யாவும் தமிழர்களின் வீரம், கொடை, பண்பாடு, விருந்தோம்பல் முதலான பண்புகளைத் தெளிவாக விளக்குகின்றன.

'தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா'

என்னும் பாடல் வரிகள், தமிழர்களின் பெருமையைக் கூறுகின்றன. தமிழர்களின் எழுத்து, சொல், உணர்வு, ஒழுக்கம், வாழ்வு, பண்பாடு ஆகியவற்றைத் தமிழின் தொன்மை இலக்கணநூலான தொல்காப்பியம் எடுத்துக் கூறுகிறது. உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சிறப்புப் பெற்று விளங்கும் நூல், திருக்குறள். 'உலகப் பொதுமறை' என்று அழைக்கப்படும் இந்நூலில், தமிழரின் வாழ்வியல் நெறிகள் காணப்படுகின்றன.

தமிழ்மொழியின் சிறப்பை உணர்ந்த அயல்நாட்டார் பலரும் தமிழைக் கற்றுக் கொண்டதோடு, தமிழில் பல இலக்கண, இலக்கியங்களையும் படைத்துள்ளனர். திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தவர், ஜி. யு. போப். இவர், ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். தம்மைத் 'தமிழ் மாணவன்' என்றே உலகோர் அறியச்செய்தார்.

நம் தாய்மொழியான தமிழ், ஈராயிரம் ஆண்டுக்குமேல் பேச்சிலும் எழுத்திலும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நாளும் பொலிவுடன் வளர்தமிழாய் தன் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தி வருகிறது. ஆகவே, இன்னும் எத்தனையோ ஆண்டுகள் பிறரை வாழ வைக்கவும், வழிநடத்தவும் திறமையுள்ள மொழியாக விளங்கும் நம் தமிழ்மொழியை உலகில் உள்ளோர் பாராட்டும் வகையில் மென்மேலும் உயர்த்த உறுதுணையாக இருப்போம்.

Tamil 3rd-std_Term3.indd 43 7/20/2019 5:43:28 PM

வாங்க பேசலாம்

தமிழின் இனிமையைப் பாரதியார் எப்படியெல்லாம் புகழ்கிறார்? கலந்துரையாடுக.

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தமிழுக்கு அமுது என்று பேர் என்று பாடியவர்----------------

அ) பாரதியார் ஆ) கண்ணதாசன்

இ) கவிமணி ஈ) பாரதிதாசன்

CJL9VD

2. 'செம்மை + மொழி' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது-----------

அ) செம்மொழி ஆ) செம்மொலி

இ) செம்மொளி ஈ) செமொழி

3. 'கீழடி' அகழாய்வு நடந்த மாவட்டம்-------------

அ) புதுக்கோட்டை ஆ) தருமபுரி

இ) சிவகங்கை ஈ) திருச்சி

4. 'ஆதித்தமிழர்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------------

அ) ஆதி+ தமிழர் ஆ) ஆதி + தமிளர்

இ) அதி + தமிழர் ஈ) ஆதீ + தமிழர்

5. பொலிவு – இச்சொல்லுக்குரிய பொருள்-----------

அ) மெலிவு ஆ) அழகு

இ) துணிவு ஈ) சிறப்பு

Tamil 3rd-std_Term3.indd 44 7/20/2019 5:43:28 PM

கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்துச் சரி ✓ தவறு X எனக் குறியிடுக.

1. இயல், இசை, நாடகம் ஆகியன தமிழின் பெருமையை வெளிப்படுத்தின [ ]
2. தமிழ்மொழி 'ஆதித்தமிழர் மொழி' இல்லை [ ]
3. 'வீரம்' தமிழரின் பண்புகளுள் ஒன்று [ ]
4. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தொடர் ஆத்திசூடியில் உள்ளது. [ ]
5. சிவகங்கையிலுள்ள கீழடியில் அகழாய்வு நடைபெறவில்லை. [ ]

அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக

தொன்மை – ______________________________

அகழாய்வு – ______________________________

ஆபரணம் – ______________________________

கேளிர் – ______________________________

பொலிவு – ______________________________

மொழி விளையாட்டு

சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்துச் சொல்லை முழுமையடையச் செய்க.

இ	சை	

நா		க	ம்

பா	

	ழ	டி



வினாக்களுக்கு விடையளிக்க

1. தமிழ்மொழியின் பெருமைகளுள் இரண்டு எழுதுக.
2. 'கீழடி' அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் யாவை?
3. தமிழரின் பெருமையைக் கணியன் பூங்குன்றனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
4. தமிழ்மொழி 'செம்மொழி' என்று ஏன் அழைக்கப்படுகிறது?
5. தமிழ்மொழி பற்றி நீவிர் அறிந்த கருத்தை எழுதுக.

பழத்திற்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிவு செய்து, சொற்றொடர் உருவாக்குக.

1.) இயல் என்பது

நடை.

இயல் என்பது, எழுத்து நடை

2.)பாறை ஓவியங்களில் தமிழர்களின்

விளையாட்டுகள் பற்றிய செய்திகள் உள்ளன.

3.) பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால், தமிழ்மொழி

ஆகும்.

4.) நடுவண் அரசு 

ஆம் ஆண்டு தமிழைச் 'செம்மொழி' என அறிவித்தது.

Tamil 3rd-std_Term3.indd 46 7/20/2019 5:43:29 PM

சிந்திக்கலாமா?

இனியன் தன் நண்பர்களிடம் பிறமொழிகள் கற்பதிலேயே, ஆர்வம் காட்டுவேன் என்று கூறுகிறான்

வீணா தன் தோழிகளிடம் பிறமொழிகளையும் கற்பேன் தமிழ்மொழிக்கு முதலிடம் தருவேன். ஏனெனில் தாய்மொழியே சிந்திக்கும் திறனை வளர்க்கும் என்கிறாள்

இனியன், வீணா இவர்களின் பேச்சிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வது என்ன?

அறிந்து கொள்வோம்

லிங்குவா என்பது இலத்தின் மொழிச்சொல் இச்சொல் மூலம் லாங்கவேஜ் என்ற சொல் தோன்றியது. இதனைத் தமிழில் நாம் 'மொழி' என அழைக்கிறோம்.

Tamil 3rd-std_Term3.indd 47 7/20/2019 5:43:30 PM

8 அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள்

ஒருநாள் மாலைப்பொழுது. இளவரசி, பூங்குழலி இருவரும் பள்ளி முடிந்து வீடு திரும்பினர். அப்பொழுது திடீரென்று வானில் ஒலி கேட்டது. மேலே பார்த்ததும் விமானம் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து பேரொலியுடன் இடி இடிக்கத் தொடங்கியது. அச்சமயம் பெய்த மழைத் தூறல், இளவரசியையும் பூங்குழலியையும் நனைத்தது.

இளவரசி : நாம் வீட்டிற்குச் செல்வதற்குள் முழுவதுமாக நனைந்து விடுவோம்போல் இருக்கிறதே! அதோ, அந்தக் கடையில் சிறிதுநேரம் நின்றுவிட்டு, மழைவிட்டதும் செல்வோமா?

பூங்குழலி : சரி. நாமாவது மழையில் நனையாமலிருக்க இங்கே ஒதுங்கி விடுகிறோம். ஆனால், வானில் பறக்கின்றதே விமானங்கள். அவற்றின் பாதையை இந்தக் கருமேகங்கள் மறைக்காதா?

இளவரசி : அதனால்தான் விமானம், கருமேகங்களைத் தாண்டி உயரத்தில் பறக்கிறது.

பூங்குழலி : அது எப்படி உனக்குத் தெரியும்?

இளவரசி : நான் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதைப் பார்த்தேன். அதில் விமானம் பறப்பது பற்றி விரிவாகக் கூறினார்கள்.

பூங்குழலி : அப்படியா? தொலைக்காட்சியில் இது பற்றியெல்லாம் சொல்கிறார்களா?

இளவரசி : ஆம். பார்ப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. விமானம் உயரத்தில் பறக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. புயல், மேகமூட்டம், இடி, மழை போன்றவற்றால் அதன் பயணம் பாதிக்கப்படுவதில்லை என்பதைக் குறும்படம் மூலம் விளக்கினார்கள்.

பூங்குழலி : கேட்பதற்கே வியப்பாக இருக்கிறதே! வேறு என்னென்ன நிகழ்ச்சிகளைத் நீ தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறாய்? மழை, தூறலாகத்தான் இருக்கிறது. பேசிக்கொண்டே செல்வோமா?

இளவரசி : கொஞ்சம் பொறு, பூங்குழலி. மழை இன்னும் விடவில்லை. சற்றுநேரம் கழித்துச் செல்வோம். இடிச்சத்தம் காதைப் பிளக்கிறது.

பூங்குழலி : இடிதானே இடிக்கிறது. மழை, பெரிதாகப் பெய்யவில்லையே, மழை வந்தால் மரத்தடியில் ஒதுங்கி நின்று விடலாமே!

Tamil 3rd-std_Term3.indd 49 7/20/2019 5:43:31 PM

இளவரசி : இல்லை பூங்குழலி. மரத்தடியில் நின்றால், இடிதாக்கி உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதைத் தொலைக்காட்சிச் செய்தியில் பார்த்திருக்கிறேன்.

பூங்குழலி : ஓ! சரி, சரி.. வேறு என்னவெல்லாம் நீ தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறாய்?

இளவரசி : பொம்மைப் படங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், செய்து பார்ப்போம் போன்ற ஏராளமான நிகழ்ச்சிகளைக்கூடப் பார்த்திருக்கிறேன்.

பூங்குழலி : தொலைக்காட்சி என்றாலே பொழுது போக்கும் ஒரு கருவியென நான் நினைத்திருந்தேன். அதனால்தான் திரைப்படம், திரைப்பாடல்கள், நாடகத் தொடர்கள் போன்றவற்றையே அடிக்கடி பார்க்க நேரிட்டது. ஆனால், நீ கூறியதுபோல் புதிய செய்திகளை அறிந்துகொள்ளவும், அறிவை விரிவு செய்யவும் தொலைக்காட்சி உதவும் என்பதை இப்போது புரிந்துகொண்டேன். இனி, நானும் இவை போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயனடைவேன்.

இளவரசி : மகிழ்ச்சி. இனி, நாள்தோறும் புதுப் புதுச் செய்திகளைத் தோழிகளுக்கு நாம் இருவருமே சொல்லலாம். சரி, இப்போது மழை நின்றுவிட்டது வா, வீட்டுக்குப் போகலாம்.

வாங்க பேசலாம்

தொலைக்காட்சி, நம் கண்ணுக்கும் காதுக்கும் மட்டுமல்ல, அறிவுக்கும் விருந்தளிக்கும் என்பதைப் பிறருக்கு நீங்கள் எப்படி உணர்த்துவீர்கள்?

படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. விமானம் பறப்பது பற்றிய செய்தியை -------வாயிலாக இளவரசி அறிந்து கொண்டாள்.

அ) கணினி ஆ) தொலைக்காட்சி

இ) வானொலி ஈ) அலைபேசி

2. ஆர்வம் – இச்சொல்லின் பொருள்--------------

அ) வெறுப்பு ஆ) மறுப்பு

இ) மகிழ்ச்சி ஈ) விருப்பம்

JCPI9B

Tamil 3rd-std_Term3.indd 50 7/20/2019 5:43:32 PM

3. உயரம் என்ற சொல்லின் எதிர்ச்சொல்___________

அ) குட்டை　　ஆ) நீளம்

இ) நெட்டை　　ஈ) நீண்ட

4. தொலைக்காட்சி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________

அ) தொலை + காட்சி　　ஆ) தொல்லை + காட்சி

இ) தொலைக்+ காட்சி　　ஈ) தொல் + காட்சி

5. குறுமை + படம் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது--------------

அ) குறுபடம்　　ஆ) குறுமை + படம்

இ) குறும்படம்　　ஈ) குறுகியபடம்

வினாக்களுக்கு விடையளிக்க

1. பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் எதைக் கண்டனர்?
2. வானில் பறக்கும் விமானம் எதனால் பாதிக்கப்படாது என்று இளவரசி கூறினாள்?
3. இளவரசி தொலைக்காட்சியில் என்னவெல்லாம் பார்த்ததாகக் கூறினாள்?

பறவைகளின் ஒலிகளை அறிந்து கோடிட்ட இடங்களை நிரப்புவோம்

கரையும்

அகவும்

பேசும்

அலறும்

கூவும்

______________________　　______________________

______________________　　______________________

____

Tamil 3rd-std_Term3.indd 51　　7/20/2019 5:43:32 PM

பொருத்தமான சொல்லால் நிரப்புவோம்

ஒளிர்மதி தோட்டத்தில் பூ பறித்துக்கொண்டு இருந்தாள். ------ கையில் ஒரு பூக்கூடை இருந்தது. அப்போது அங்குப் பரணி வந்தான். ______ கையில் இரண்டு பொம்மைகள் இருந்தன.------ பார்ப்பதற்கு அழகாக இருந்தன. ஒளிர்மதி, பொம்மையின் தலையில் செம்பருத்திப் பூ வைத்தாள். ______ சிவப்பு வண்ணத்தில் அழகாக இருந்தது. பிறகு, --------- மாமர ஊஞ்சலில் விளையாடினார்கள்.

கதையைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தவளை ஒன்று மிகவும் உடல்நலம் குன்றியிருந்தது. அதன் குட்டித் தவளை தன் தாயைக் காப்பாற்ற நினைத்தது. மாலைநேரம் முடிவதற்குள் மலைமேல் ஏறி, மூலிகை கொண்டு வர நினைத்தது. அந்த மலையில் ஏராளமான பாம்புகள் வாழ்ந்து வந்தன. பாம்புகளால் தனக்குத் தீங்கு நேரிடும் என்று நினைத்தது குட்டித் தவளை. தன் அறிவைப் பயன்படுத்திச் சென்றால்தான் மாலைக்குள் திரும்ப முடியும் என்று நினைத்தது. மலையில் ஏறத் தொடங்கியதும், அந்தக் குட்டித் தவளை பேசத் தொடங்கியது. "முன்னே செல்லும் பருந்தாரே! பின்னே பெரிய கீரியார் மெள்ள வருகிறார், சற்றுப் பொறுத்தே செல்லுங்கள்" என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே சென்றது. பாம்புகள் குட்டித்தவளை கூறுவதைக் கேட்டு ஓடி ஒளிந்துகொண்டன. குட்டித்தவளை, தன் கூர் சிந்தனைத்திறனால் காலம் கடத்தாமல் விரைந்து சென்று, மூலிகை கொண்டு வந்து தன் தாயைக் காப்பாற்றியது.

1. உடல்நலம் குன்றிய நிலையில் எது இருந்தது?
2. குட்டித்தவளை, தனக்கு யாரால் தீங்கு ஏற்படும் என நினைத்தது?
3. குட்டித்தவளை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, எந்தெந்தப் பெயர்களைக் கூறியது?
4. குறித்த நேரத்திற்குள் ஒரு செயலைச் செய்து முடிப்பது எதைக் குறிக்கும்?

   அ) பணிவு ஆ) காலந் தவிர்க்காமை இ) நேர்மை

Tamil 3rd-std_Term3.indd 52 7/20/2019 5:43:33 PM

அறிந்து கொள்வோம்

தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர்
ஜான் லெகி பெயர்டு

விமானத்தைக் கண்டறிந்தவர்கள்
ஆல்பர்ட் ரைட், வில்பர்ட் ரைட்

வானொலியைக் கண்டறிந்தவர்
மார்க்கோனி

சிந்திக்கலாமா?



பாவழகி அவளுடைய எழுதுகோலைக் கையிலேயே வைத்திருப்பதால் தவறித் தொலைத்து விடுவாள்...

பாத்திமா தன் எழுதுகோலைப் பெட்டியில் வைத்துப் புத்தகப் பைக்குள் வைத்திருப்பாள் எனவே, அது பாதுகாப்பாக இருக்கிறது

உன் பொருள்களை நீ எவ்வாறு பாதுகாப்பாய்?

Tamil 3rd-std_Term3.indd 54 7/20/2019 5:43:33 PM

கலையும் கைவண்ணமும்

மின்அட்டையில் வாழ்த்து அட்டை உருவாக்குதல்

தேவையான பொருள்கள்

மின் அட்டை

பசை

வண்ண நூல்கள்

- மின் அட்டையின் ஓரங்களில் வண்ண நூல்களை ஒட்டி அலங்காரம் செய்யவேண்டும்.
- நாம் விரும்பும் படம் வரைந்து அதன் மேல் வண்ண நூல்களை ஒட்ட வேண்டும்.
- தேவையான வாழ்த்துச்செய்தியை அட்டையின் நடுப்பகுதியில் எழுதி, வாழ்த்து அட்டையை உருவாக்கவேண்டும்.

சொந்த நடையில் கூறுக.

தொலைக்காட்சியின் நன்மைகளைப் பற்றி உம் சொந்த நடையில் கூறுக

செயல் திட்டம்

- தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்வி பற்றிய செய்திகளைத் தொகுத்து வருக
- உம் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதி வருக.

Tamil 3rd-std_Term3.indd 55 7/20/2019 5:43:34 PM

பட விளக்க அகரமுதலி

	பனிக்கரடி இது உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும். இது நீரிலும் நிலத்திலும் வேட்டையாட வல்லது. இதனைத் துருவக்கரடி எனவும் கூறுவர்.
	பால் சத்துமிக்க ஓர் உணவு. இதில் கால்சியம், பொட்டாசியம், புரதம் போன்ற சத்துகள் அடங்கியுள்ளன. உலகளவில் மிகுதியாகப் பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிறது.
	பிண்ணாக்கு தேங்காய், எள், கடலை போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுத்தபின் மிஞ்சும் சக்கை. இது விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுகிறது.
	பீர்க்கங்காய் நார்ச்சத்துமிக்க காய்களுள் ஒன்று. இதன் தோல், நோயைக் குணப்படுத்தும்.
	புறா முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவைகளுள் ஒன்று. இப்பறவைகள் குச்சிகள், குப்பைகள் கொண்டு கூடு கட்டுகின்றன. இவை, தானிய வகைகளை இரையாக உட்கொள்கின்றன.
	பூண்டு மருத்துவப் பயன்மிக்க ஓர் உணவுப் பொருள். இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்கக் கூடியது .

Tamil 3rd-std_Term3.indd 53 7/20/2019 5:43:33 PM

	பெங்குயின் குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும். இது, பறவை இனத்தைச் சார்ந்து இருந்தாலும், பறக்க முடியாது. மனிதர் நடப்பதுபோல இதன் நடை அமைந்திருக்கும். நீரில் நன்றாக நீந்திச் செல்லும்.
	பேரிச்சம்பழம் இது, பனைவகையைச் சார்ந்தது. இது மருத்துவக் குணம் உடையது. இதில் இரும்புச்சத்து இருப்பதால், இரத்தசோகையை நீக்கும்.
	பை இது பொருள்களை எடுத்துச் செல்ல உதவுகிறது. துணி முதலான பொருள்களைக்கொண்டு உருவாக்கப்படுகின்றது. பல வண்ணங்களில் சந்தையில் கிடைக்கிறது.
	பொங்கல் விழா இவ்விழா, தைமாதம் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. உணவுப் பொருள்களை விளைவிக்க உதவுவது இயற்கை. அதற்கு நன்றி செலுத்தும் வகையில் இதனைக் கொண்டாடுகின்றனர்.
	போர்வாள் பண்டைக் காலத்தில், மன்னர்கள் பயன்படுத்திய படைக்கருவிகளுள் ஒன்று. போரிடும் காலங்களில், வீரர்கள் இக்கருவியைப் பயன்படுத்துவர்.
	**பௌவம்** கடலைக் குறிக்கும் ஒரு சொல், பௌவம். பூமியின் பெரும்பகுதி கடலாலேயே சூழப்பட்டுள்ளது. கடல் நீர் உப்புக் கரிக்கும். கடல் நமக்கு மீன், சிப்பி, நண்டு, முத்து, பவளம் முதலான வளங்களைத் தருகிறது.

Tamil 3rd-std_Term3.indd 53 7/20/2019 5:43:33 PM

அகரமுதலி

அகழாய்வு	–	நிலத்தைத் தோண்டி ஆராய்தல்
அசடு	–	பேதைமை
அடாத செயல்	–	தகாத செயல்
அடையாளம்	–	இனங்காணல்
அவசரம்	–	விரைவு
ஆதி	–	முதல்
ஆபரணம்	–	அணிகலன்
ஆர்வம்	–	விருப்பம்
இசைந்து	–	ஏற்றுக்கொண்டு
இல்லம்	–	வீடு
ஏராளமான	–	நிறைய
ஓங்குதல்	–	உயர்தல்
குற்றம்	–	மாசு/ தவறு
கேளாமல்	–	கேட்காமல்
கேளிர்	–	உறவினர்
கோபம்	–	சினம்
செம்மை	–	சிறப்பு
தகவல்	–	செய்தி
தொன்மை	–	பழைமை
நஷ்டம்	–	வருமானம் இழப்பு
நல்கூர்ந்தார்	–	வறுமையுற்றவர்
பதில்	–	விடை
பயம்	–	அச்சம்
பாதிப்பு	–	விளைவு
புத்திசாலி	–	அறிவாளி
பொலிவு	–	அழகு
பொழியும்	–	பெய்யும்
மௌனம்	–	அமைதி

Tamil 3rd-std_Term3.indd 56 7/20/2019 5:43:34 PM

கற்றல் விளைவுகள்

கேட்டல்	பேசுதல்	படித்தல்	எழுதுதல்
• கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்வர். • அவற்றின் மீதான கருத்தினை/ நோக்கினை வெளிப்படுத்துவர். • தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர். • வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர். • வானொலி தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்து கொள்வர்.	• அறிந்த/கேட்ட கதைகளைக் கலவைத்தொடரில் பேசுவர். • பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர். • கேட்டுணர்ந்த கதை, கதைப்பாடல்களின் தலைப்புகள், கதை மாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துவர். • தமக்கு அறிமுகமான, செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுவர். • கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர். • பண்புடன் உரையாடுவர்.	• தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர். • எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர். • முற்றுப் புள்ளி, வினாக் குறி ஆகிய நிறுத்தக்குறியீடுகளை அறிந்து படிப்பர். • மூன்று அல்லது நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர். • சூழல் சார்ந்து, புதிய சொற்களின் பொருள் புரிந்து படிப்பர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்துகொள்ள முயல்வர். • படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச்சொல், வினைச்சொல், பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்துகொள்வர்.	• உரிய வடிவத்தில், முறையான இடைவெளிவிட்டு எழுதுவர். • செய்தி/ உரைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து, கருத்து தெரிவிப்பர். கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர். • புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர். • அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர்.

Tamil 3rd-std_Term3.indd 57 7/20/2019 5:43:35 PM

நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்	கற்கக் கற்கும் திறன்கள் (தானே கற்றல்)	சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்
• இன எழுத்துகளை அறிந்துகொள்வர். • வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை அறிவர் • ஒருமை, பன்மை வேறுபாடு அறிவர் (அது – அவை) • இரு திணை அறிந்துகொள்வர். (உயர்திணை, அஃறிணை)	• சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துவர். • கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்வர். • படக்கதைகளைத் தேடிப் படிப்பர்.	• கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர் • உணவுப் பொருள்களின் பெயர்கள் • ஆடை வகைகளின் பெயர்கள் • அணிகலன்களின் பெயர்கள் • மரம், செடி, கொடிகளின் பெயர்கள் • பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை…) • தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள் • இன்றியமையா ஆளுமைகளின் பெயர்கள் (நாட்டின் பிரதமர், குடியரசுத் தலைவர், முதலமைச்சர், ஆளுநர், கல்வி அமைச்சர்…) • பழமொழிகள் • மரபுத் தொடர்கள் • சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படிப்பர் • சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகள் • சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர்
படைப்புத் திறன்கள்	**விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுவர்**	**வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர்**
• ஒரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர். • கதையைத் தொடர்ந்து கூறி முடிப்பர்.	• காலம் தவிர்க்காமை • விதிகளைப் பின்பற்றுதல் • தூய்மை பேணுதல் • பொருள்களைப் பாதுகாத்தல் • பிறர்க்கு உதவுதல் • பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் • கூட்டுணர்வு • நட்புணர்வு • உண்மை பேசுதல் • சேமிப்பு உணர்வு	• தன்னை அறியும் திறன் • சிக்கல் தீர்க்கும் திறன் • முடிவெடுக்கும் திறன் • கூர்சிந்தனைத் திறன் • படைப்பாக்கச் சிந்தனைத் திறன் • சிறந்த தகவல் தொடர்புத் திறன் • இணக்கமான உறவுக்கான திறன்கள் • பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன் • உணர்வுகளைக் கையாளும் திறன் • மன அழுத்தத்தைக் கையாளும் திறன்

Tamil 3rd-std_Term3.indd 58 7/20/2019 5:43:35 PM

தமிழ் – மூன்றாம் வகுப்பு
நூல் ஆக்கம்

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

திருமதி ஆ.சே.பத்மாவதி,எழுத்தாளர்,
சென்னை.

திருமதி பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

திரு சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

திரு இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

திரு ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

தே.விமலா தேவி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

சந்தோஷ்குமார் சக்திவேல்

வரைபடம்

கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
ரா.ஷாலினி
வை.மை.பிராங்க் டஃப்
மதன் கங்காதரன்
பா. ரவிகுமார்,
வேல்முருகன்
பா. பிரமோத்
செ. ரமேஷ்குமார்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ்

காமாட்சிபாலன் ஆறுமுகம்

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி அர. அனுசுயா தேவி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம்,
விழுப்புரம் மாவட்டம்.

திருமதி பெ. முருகராணி, இடைநிலை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

திருமதி க. மல்லிகா, தலைமை ஆசிரியை,
ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர்,
திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

திரு. பா.ச. குப்பன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திரு. ஆ. மாணிக்கம், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி,
அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

திருமதி. ந. பரிமளா, தலைமைஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சித் தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

திரு. வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திரு. ந. மாமலைவாசன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

திரு. வெ. ராஜா, இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம், சேலம்.

திருமதி பி கற்பகம் இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, ஐயப்பா நகர், வில்லிவாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்

திரு. கு. மனத்துணைநாதன், இடைநிலை ஆசிரியர்,
ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம்.

திரு. பெ. கார்த்திகேயன், இடைநிலை ஆசிரியர்
ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை,
நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன், இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

ஆ.தேவி ஜெஸிந்தா, ப.ஆ, அ.உ.நி.பள்ளி,
என்.எம்.கோவில், வேலூர்

வ. பத்மாவதி, ப.ஆ, அ.உ.நி. பள்ளி,
வெற்றியூர், திருமானூர், அரியலூர்.

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

Tamil 3rd-std_Term3.indd 59 7/20/2019 5:43:35 PM